மு. ஸ்ரீநாகேஷ்
மக்கள் தொடர்பு மேலாளர்

க.எண்.செகுவா / பகுதி 3 /சிறப்பு/ 2009 நாள் 17.12.2009

பெறுநர்
ஆசிரியர்,
தினமலர் நாளிதழ்,
சென்னை 600 002.

அய்யா,

பொருள் : சென்னைக் குடிநீர் வாரியம் – பகுதி3– சென்னை வியாசர்பாடி, சாமந்தி பூ காலனியில் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தெருவில் தேங்கி சுகாதார கேடு உருவாவதாக வெளியான செய்தி – பதிலளித்தல்.

பார்வை: 1.12.2009 தேதியிட்ட தினமலர் நாளிதழ்.

/0/

பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்கள் நாளிதழில் சென்னை வியாசர்பாடி சாமந்தி பூ காலனியில் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் குளம் போல் தேங்கி இருப்பதை எங்கள் கவனத்திற்கு கொண்டுவந்தமைக்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில், தொடர்ந்து பெய்து வந்த மழை காரணமாக, சென்னை வியாசர்பாடி சாமந்திப்பூ காலனியில் மழைநீர் கழிவு நீரகற்றமைப்பில் புகுந்ததன் விளைவாகவும் கழிவுநீரேற்று நிலையங்களில் மிகுதியான நீர்வரத்து இருந்ததாலும் மழை நீருடன் சேர்ந்து மணல், சேறு போன்ற திடக் கழிவுகள் கழிவுநீரகற்றமைப்பில் புகுந்ததாலும் சில இடங்களில் கழிவுநீர் தேக்கமும், கழிவுநீர் வழிந்தோடுதலும் ஏற்பட்டது. இத்தெருக்களில் கழிவுநீரகற்றமைப்பில் இருந்த கசடுகள் அகற்றப்பட்டு தற்போது அடைப்பு ஏதுமில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எங்களுடைய மக்கள் பணியில் தங்களின் ஆதரவை தொடர்ந்து வழங்கக் கோரும்,

மக்கள் தொடர்பு மேலாளர்

**pdfMachine**
**A pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!